DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.27/2021 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **தேவேந்திரன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி சிறையில் உள்ளார்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 18.11.25

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கிளாதிரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரி கார்த்திக் என்ற அண்டங்கார்த்திக் என்பவரை தெரியும். பட்டியல் சாட்சி 3 சங்கையாவை தெரியும். பட்டியல் சாட்சி 6 சாட்சிகள் பொன்னுபிள்ளை, பட்டியல் சாட்சி 7 கருப்பாசமி ஆகியோர்களை தெரியும். கடந்த 14.06.2019 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது திடீரென வெடி சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் சங்கையாவின் மனைவி அழுகுரல் சத்தம் கேட்டது. அதன்பிறகு நான் ஓடிச்சென்று பார்த்தேன். அப்போது அக்கம்பக்கத்தில் இருந்தவர்களும் வந்து பார்த்தார்கள். சம்பவ இடமான அ.சா.2 சங்கையாவின் வீட்டருகே மணல் குவிக்கப்பட்ட இடத்தில் நடந்திருந்தது. அந்த மணல் குவியலில் சங்கையாவின் மகன் கார்த்திக் என்ற அண்டங்கார்த்திக்

வெடியை மறைத்து வைத்திருந்தது தான் தற்போது வெடித்துவிட்டது என அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

2. அந்த வெடி விபத்தில் அ.சா.3 சங்கையாவின் இடது கால் முற்றிலும் சேதமாகியிருந்தது. மேற்படி வெடி மணலில் புதைக்கப்பட்டிருப்பது தெரியாமல் அ.சா.3 சங்கையா மிதித்ததால் இந்த வழக்கு சம்பவம் நேர்ந்தது. அதன்பிறகு கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்ததால் வாகனம் வந்துவிட்டது. வாகனத்தில் வந்தவர்கள் அ.சா.3 சங்கையாயின் சேதமடைந்த காலை அங்கேயே கட்டி வாகனத்தில் அவரையும் அவரது மனைவியையும் ஏற்றிக்கொண்டு மேலூர் மருத்துவமனைக்கு சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.3 சங்கையாவின் வீட்டிலிருந்து எனது வீடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீ இருக்கும். வெடி வெடித்து எவ்வளவு நேரம் கழித்து நான் சென்றேன் என்றால் ஒரு 5 நிமிடம் கழித்து சென்றேன். நான் அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றி சென்றேனா என்றால் இல்லை. அ.சா.3 சங்கையாவிற்கு வெடி வெடித்து எவ்வாறு காயம்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. போலிசார் விசாரணையின்போது கணினியில் ஏதும் தட்டச்சு செய்தார்களா என்றால் இல்லை, ஆனால் விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.18 11:07:48 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**